முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.91/2021

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 16–03–2026.

பெயர் = ஜோதி வா.சா.1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 8 ம் பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) 8 ம் பிரதிவாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். பிராது வரைபடத்தில் உள்ள HFCSRDEG பகுதி 8 ம் பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியமானது என்றால் சரிதான். FCED பகுதியை நான் ஆதியிலிருந்து நடைபாதையாக பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் நடைபாதையாக பயன்படுத்திவருவதை 8 ம் பிரதிவாதி எப்போதும் தடை செய்தது கிடையாது என்றால் சரிதான். என்னிடம் பிரச்சனை செய்யாத 8 ம் பிரதிவாதியை வேண்டுமென்றே இவ்வழக்கில் சேர்த்துள்ளோம் 8 ம் பிரதிவாதி இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. 8 ம் பிரதிவாதியை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.16 15:02:53 +0530